www.agaram.lk

08488

OL/2016/14-T-I,II (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

14 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்க திருமறை I, II
Catholicism I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## கத்தோலிக்க திருமறை I

**கவனிக்க :**

(i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** இறை வெளிப்பாட்டின் எழுத்து வடிவம் பெற்ற மூலம் எது?
(1) திருவிவிலியம் (2) பஞ்சாகமம் (3) புதிய ஏற்பாடு (4) பழைய ஏற்பாடு

**2.** பழைய ஏற்பாட்டில் உள்ளடக்கப்படுவது,
(1) திருச்சபைப் பாரம்பரியம் (2) சட்டக்கோவை
(3) மீட்பின் வரலாறு (4) இறைவாக்கினரின் அழைப்பு

**3.** திருத்தூதர் பணிநூல் எழுதப்பட்டது எந்த இடத்திலாகும்?
(1) உரோமையின் வத்திக்கானில் (2) கிரேக்க தேசத்தில் அகாயா என்னுமிடத்தில்
(3) எருசலேமில் (4) பெத்லேகெமில்

**4.** வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள்
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

**5.** யூதர்கள் கையில் காட்டிக்கொடுக்கப்பட்டதை அடுத்து இயேசு அழைத்துச் செல்லப்பட்டது,
(1) தலைமைக்குருவின் வீட்டிற்காகும் (2) மண்டை ஓடு எனும் இடத்திற்காகும்
(3) கெத்சமனித் தோட்டத்திற்காகும் (4) தலைமைச் சங்கத்திற்காகும்

**6.** இயேசுவின் உயிர்ப்பிற்கு முதல் சாட்சி ஆனவர் யார்?
(1) மகதலா மரியாள் (2) மரியன்னை (3) மரியா (4) எலிசபெத்து

**7.** “நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்” எனக் கூறியவர்
(1) தூய பவுல் (2) தூய பேதுரு (3) தூய யோவான் (4) தூய தோமா

**8.** “அருளடையாளங்களின் அருளடையாளம்” என அறிமுகம் செய்யப்படுவது,
(1) நற்கருணை (2) திருமுழுக்கு (3) குருத்துவம் (4) மெய்விவாகம்

**9.** “குறொசிங் த திறஷ்கோல்ட் ஒப் ஹோப்” என்னும் சுற்றுமடலை எழுதியவர்
(1) தூய அன்னை திரேசா (2) திருத்தந்தை பிரான்சிஸ்
(3) அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளார் (அ.ம.தி) (4) தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்

**10.** “தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை” என்பதைத் தன் முன்மாதிரிகையான வார்த்தையாகக் கொண்டவர்
(1) திருத்தந்தை பிரான்சிஸ் (2) திருத்தந்தை 16 ஆவது பெனடிக்
(3) தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் (4) தூய மக்ஸிமிலியன் அடிகளார்

**11.** முதலாம் கட்டளை எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது?
(1) நம்பிக்கை, எதிர்நோக்கு, இறைஅன்பு (2) இறைமகிமை அனைத்திற்கும் உரிமையாதல்
(3) மனிதன் இறைவனுக்குக் காண்பிக்கும் மரியாதை (4) இறைவன் நமக்குக் காட்டும் அன்பு

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



12. எதிர்நோக்கிற்கு எதிரான பாவம் ஆவது,
    (1) எதிர்நோக்கை இழத்தல், மிதமிஞ்சிய எதிர்நோக்கு (2) கிறிஸ்து நாதரிடமிருந்து விலகிச் செல்லல்
    (3) விண்ணரசை இழத்தல் (4) தூய ஆவியின் கொடைகளை இழத்தல்

13. "பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்" தூய பவுல் இவ்வாறு கூறுவது
    (1) பிலிப்பியர் சபைக்கு (2) எபேசியர் சபைக்கு (3) உரோமையர் சபைக்கு (4) கொலோசேயர் சபைக்கு

14. திருவிவிலியப் படிப்பினையின் படி வாழ்வதன் மூலம் அன்பை குடும்பத்தில் மட்டுமல்ல, சமுதாயத்திலும் அனுபவிக்க முடியும் என்பதை, நமக்குக் கற்பிப்பது,
    (1) முதலாவது கட்டளை (2) இரண்டாவது கட்டளை (3) நான்காவது கட்டளை (4) ஆறாவது கட்டளை

15. ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் உயிர்மூச்சை ஊதினார் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது
    (1) முதலாவது படைப்புக் கதையிலாகும் (2) இரண்டாவது படைப்புக் கதையிலாகும்
    (3) லேவியர் சட்டக்கோவையிலாகும் (4) விடுதலைப் பயணநூலிலாகும்

16. "இறக்க நேர்ந்தாலும் நான் எனது இறைவாழ்வை இழந்து விடமாட்டேன்" என இயேசுவிடம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியதாக இறக்கும்போது கூறியவர்
    (1) தூய அன்னை திரேசா (2) தூய அக்னஸ்
    (3) தூய மரிய கொறற்றி (4) தூய இசபெல்லா

17. "உங்கள் உடல் நீங்கள் கடவுளிடம் இருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோயில் என்று தெரியாதா?" என கொரிந்தியர் சபைக்கு, தூய பவுல் எவ்விரண்டு கட்டளைகள் தொடர்பாக, இவ்வாறு கற்பிக்கிறார்?
    (1) ஏழும், பத்தும் (2) மூன்றும், நான்கும் (3) ஐந்தும், எட்டும் (4) ஆறும், ஒன்பதும்

18. "திருடர் இனித் திருடாமல் இருக்கட்டும். மாறாகத் தேவையில் உழல்வோருக்கும் பகிர்ந்து கொடுக்கத் தங்களிடம் பொருள் இருக்கும் வகையில் தாங்களே தங்கள் கைகளால் நேர்மையோடு பாடுபட்டு உழைக்கட்டும்" தூய பவுல் யாருடைய சபைக்கு இவ்வாறு கற்பிக்கிறார்?
    (1) எபேசியர் (2) பிலிப்பியர் (3) தெசலோனிக்கர் (4) கொரிந்தியர்

19. பொய் சொல்லுவது சிறியதொரு செயலாக விளங்கினாலும், அது மாபெரும் தவறு என்பது வெளிப்படுத்தப்படுவது,
    (1) முன்மதியோடு செயற்பட்ட களஞ்சியப் பொறுப்பாளரின் உவமையின் மூலமாகும்
    (2) பரிசேயனும் ஆயக்காரனும் உவமையின் மூலமாகும்
    (3) அனனியா மற்றும் சப்பிராளின் மரணத்தின் மூலமாகும்
    (4) அத்திமரத்தின் உவமையின் மூலமாகும்

20. திருவழிபாட்டு ஆண்டு ஆரம்பிப்பது,
    (1) திருவருகைக்காலத்தின் முதலாம் ஞாயிறன்றாகும் (2) தூய ஆவியின் திருவிழா அன்றாகும்
    (3) தை முதலாம் திகதியாகும் (4) பாஸ்கா ஞாயிறு அன்றாகும்

21. திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் குருக்கள் பாரம்பரியத்திற்குரிய நிகழ்வு எதுவாகும்
    (1) காயின், ஆபேலின் சம்பவம் (2) படைப்பின் இரண்டாவது கதை
    (3) ஆதாம் ஏவாள் பாவத்திற்குட்பட்ட சம்பவம் (4) நோவாவுடன் உடன்படிக்கை

22. ஐந்நூலின் முக்கியத்துவம் ஆவது
    (1) படைத்தவரும், மீட்டவருமான இறைவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்பதை விளக்குகிறது
    (2) இறைவன் உலகைப் படைத்தார் என்பதை விளக்குகிறது
    (3) மனிதன் கடவுளின் படைப்பு என்பதை விளக்குகிறது
    (4) இறைவனால் எல்லாம் செய்ய முடியும் என்பதை விளக்குகிறது

23. கீழே தரப்பட்டுள்ள நூல்களில் பழைய ஏற்பாட்டில் காணப்படும் இணைத்திருமுறை நூல் ஒன்று எது?
    (1) ஒபதியா (2) புலம்பல் (3) யூதித்து (4) நீதிமொழிகள்

24. கீழே குறிப்பிட்டுள்ள இறைவாக்கினருள் எழுத்து வடிவம் **பெறாத** இறைவாக்கினர் ஒருவர் யார்?
    (1) ஒபதியா (2) ஆமோஸ் (3) நாத்தான் (4) அபக்கூக்கு

25. "மானிடா நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்று உன்வயிற்றை நிரப்பு" இவ்வாறு இறைவன் யாருக்குக் கூறினார்?
    (1) எரேமியா இறைவாக்கினருக்காகும் (2) யோவேல் இறைவாக்கினருக்காகும்
    (3) எசக்கியேல் இறைவாக்கினருக்காகும் (4) ஆமோஸ் இறைவாக்கினருக்காகும்

26. இயேசுவின் தலைமுறை அட்டவணையுடன் தமது நற்செய்தியை ஆரம்பிப்பவர்
    (1) தூய மத்தேயு (2) தூய மாற்கு (3) தூய லூக்கா (4) தூய யோவான்

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



27. தொடக்கநூலின் மூன்றாம் அதிகாரத்தில் கூறப்படும் பாம்பினால் அடையாளப்படுத்தப்படுவது
(1) தீமை (2) மனிதனுக்குள் இருக்கும் ஆசை
(3) பொய்த்தெய்வ வழிபாடு (4) சாத்தான்

28. நோவாவுடனான உடன்படிக்கையின் வெளி அடையாளமாக விளங்குவது,
(1) வானவில் (2) விருத்தசேதனம் (3) கடத்தல் (4) பத்துக் கட்டளை

29. புதுமைகள் என்பது இயற்கைக்குள் நாம் அறிந்த உண்மைக்கு மாறாக இடம்பெறும் ஓர் செயல் எனக் கூறுபவர்,
(1) தூய அம்புறோஸ் (2) தூய அக்குவைனாஸ் (3) தூய அகுஸ்தினார் (4) தூய ஏரோணிமுஸ்

30. 'விண்ணரசில் நுழைய நாம் திருமுழுக்குப் பெறவேண்டும்' என இயேசு கூறியது
(1) தூய பேதுருவிற்காகும் (2) நிக்கதேமுவுக்காகும்
(3) தூய யோவானுக்காகும் (4) செல்வரான இளைஞருக்காகும்

31. குருத்துவத்தின் முழுநிறைவு உரிமையாவது,
(1) திருத்தொண்டர் நிலைக்காகும் (2) குருத்துவ நிலைக்காகும்
(3) ஆயர் நிலைக்காகும் (4) மடாதிபர் நிலைக்காகும்

32. கத்தோலிக்க திருமணத்தின் வெளியடையாளமாக விளங்குவது
(1) மோதிரம் மாற்றிக் கொள்ளுதல் (2) பெற்றோருக்கு பணிதல்
(3) சாட்சிகள் கைசாத்திடல் (4) திருமண ஒப்பந்தம்

33. துறவற வார்த்தைப்பாடுகள் **மூன்றும்** ஆவன
(1) குழுவாழ்வு, செப வாழ்வு, பணி வாழ்வு என்பனவாகும் (2) கற்பு, கீழ்படிதல், ஏழ்மை என்பனவாகும்
(3) ஒருமை, கட்டவிழாமை, விரதத்துவம் என்பனவாகும் (4) கீழ்படிதல், விரதத்துவம், செப வாழ்வு என்பனவாகும்

34. பழைய உடன்படிக்கையில் "சமாதானம்" என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல்
(1) ஷாலொம் (2) எலோகிம் (3) புரோபெட்டஸ் (4) யாவே

35. உடலைச் சார்ந்த இரக்கச் செயலில் ஈடுபடுவது, குறித்த ஒருவருடைய,
(1) ஆன்ம திருப்த்திக்காகும் (2) உள நலனுக்காகும்
(3) ஆன்மீக நலனுக்காகும் (4) உடல் நலனுக்காகும்

36. பின்வரும் செயல்களுள் ஆன்மாவைச் சார்ந்த ஓர் இரக்கச் செயலாக அமைவது எது?
(1) பசித்தோருக்கு உணவு கொடுப்பது (2) அடிமைகளை விடுவிப்பது
(3) இறந்தோரை அடக்கம் செய்வது (4) வாழ்வோருக்காகவும், இறந்தோருக்காகவும் செபிப்பது

37. குறித்த நாட்களில் சுத்தபோசனமும், ஒரு சந்தியும் கடைபிடிப்பது பற்றிக் கூறப்படுவது,
(1) திருச்சபைச் சட்டக் கோவையில் ஆகும் (2) தூய லூக்கா நற்செய்தியில் ஆகும்
(3) பத்துக் கட்டளையில் ஆகும் (4) உரோமையர் திருமுகத்தில் ஆகும்

38. புகழ்ச்சிக்குரிய வாழ்த்துக்கள் மூன்றும், ஆன்மீக தேவைகளை அடிப்படையாகக் கொண்ட வேண்டுதல்கள் நான்கும் அடங்கியுள்ள செபம் எது?
(1) இயேசு கற்பித்த செபம் (2) உன்னத குருவின் செபம்
(3) மூவேளைச் செபம் (4) நற்கருணை மன்றாட்டு

39. "எல்லாத் தலைமுறைகளும் இதில் இருந்து என்னைப் பேறுபெற்றவர் என்பர்" என மரியன்னை கூறியது,
(1) தூய பெர்ணதேத்திற்காகும் (2) தூய எலிசபெத்திற்காகும்
(3) கபிரியேல் தேவதூதனுக்காகும் (4) தூய யோசேப்பிற்காகும்

40. திருப்பாடல்களில் சங்கீதங்கள் ஊடாக எல்லோரும் குழுவாக ஒன்றித்து நடாத்திய புகழ்ச்சி மன்றாட்டு,
(1) நற்கருணை மன்றாட்டு (2) திருப்புகழ் மாலை
(3) மரியாவின் புகழ்ச்சிப்பாடல் (4) செக்கரியாவின் புகழ்ச்சிப்பாடல்

* *

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

14 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

| | |
|---|---|
| කතෝලික ධර්මය | I, II |
| கத்தோலிக்க திருமறை | I, II |
| Catholicism | I, II |

## கத்தோலிக்க திருமறை II

**கவனிக்க:**

※ **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ முதலாம் வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) இறைவார்த்தையின் (வெளிப்பாட்டு) மூலங்கள் **இரண்டும்** எவை?

(ii) தூய பவுல் திருமுகங்களை எழுதியதன் நோக்கங்கள் **இரண்டையும்** எழுதுக?

(iii) இஸ்ரயேலரின் பலிகளை வகைப்படுத்தும் பிரதான **இரு** பிரிவுகளினதும் பெயர்களைத் தருக.

(iv) குலமுதுவர் யாக்கோபுவின் மகன் யோசேப்பு போத்திபாரின் மனைவியின் விருப்பத்திற்கு இணங்கியிருப்பின் அவர் மீறும் கட்டளைகள் **இரண்டும்** எவை?

(v) திருப்பலியின் பிரதான **இரு** பகுதிகளும் எவை?

(vi) இஸ்ரயேல் இறைவாக்கினரை வகைப்படுத்தும் பிரதான **இரு** பிரிவுகளும் எவை?

(vii) இறைவன் ஆபிரகாமோடு ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையில் அடங்கும் பிரதான விடயங்கள் **இரண்டும்** எவை?

(viii) குணமளிக்கும் அருளடையாளங்கள் **இரண்டும்** எவை?

(ix) படைப்புப்பற்றிய இரண்டாவது கதையின்படி கடவுள் மனிதனுக்குக் கொடுத்த பொறுப்புக்கள் **இரண்டும்** எவை?

(x) மரியன்னை காட்சி கொடுத்த இடங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

**2.** (i) அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் எழுதிய **இரு** நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) தூய யோசப்வாஸ் அடிகளார் செய்த புதுமைகள் **மூன்றை** எழுதுக.

(iii) ஒல்லாந்தர் கரையோரப் பகுதியை ஆட்சிசெய்த காலத்தில் கத்தோலிக்கர்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்த இன்னல்கள் **ஐந்தினை** சுருக்கமாக விபரிக்குக.

**3.** (i) தூய அன்னை திரேசா முதலில் தாம் இணைந்த துறவற சபை மற்றும் பின்னர் அவர் ஆரம்பித்த துறவற சபை ஆகியவற்றை எழுதுக.

(ii) தூய அன்னை திரேசாவின் திருமுழுக்குப் பெயரையும், அவர் பெற்ற விருதுப் பெயர்கள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(iii) தூய அன்னை திரேசாவின் அர்ப்பணமுள்ள சேவையைப் பாராட்டி அதன் மூலம் உமது வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

**4.** (i) படைப்புப் பற்றிய முதலாவது, இரண்டாவது கதைகள் எழுதப்பட்டுள்ள பாரம்பரியங்கள் **இரண்டும்** எவை?

(ii) எல்லாப் படைப்புக்களையும் விட மேலானவனான மனிதனின் மாண்பை பிரதிபலிக்கச் செய்யும் பண்புகள் **மூன்றும்** எவை?

(iii) இறை கட்டளையை மீறியதால் ஆதிப் பெற்றோருக்கும், பாம்பிற்கும் கொடுத்த தண்டனையைக் குறிப்பிட்டு, நீர் இறைவனின் கட்டளைக்கு எவ்வாறு கீழ்படிகின்றீர் என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

**5.** (i) எகிப்தியர் முகம் கொடுத்த பெரும் துன்பங்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) இஸ்ரயேல் இனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த அரசன் மேற்கொண்ட செயற்பாடுகள் **மூன்றும்** எவை?

(iii) இஸ்ரயேல் மக்கள் விடுதலைப் பயணத்தில் இறை பராமரிப்பை எவ்வாறு அனுபவித்தார்கள் என்பதை **மூன்று** உதாரணங்களின் மூலம் விளக்கி, உமது வாழ்வில் இறைபராமரிப்பை எவ்வாறு அனுபவிக்கிறீர் என்பதை **இரண்டு** உதாரணங்களின் மூலம் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

**6.** (i) கத்தோலிக்க திருமணத்தின் பண்புகள் **இரண்டும்** எவை?

(ii) கத்தோலிக்க திருமணத்திற்குள்ள சட்டரீதியான தடைகள் **மூன்றையும்** எழுதுக.

(iii) பெற்றோர் மட்டில் பிள்ளைகளுக்குள்ள கடமைகள் **ஐந்தினை** எடுத்துக்காட்டுக.

**7.** பின்வரும் தலைப்புகளில் **இரண்டினைத்** தெரிவுசெய்து சிறுகுறிப்பு எழுதுக.

(i) பெந்தக்கோஸ்தே நிகழ்வு

(ii) உண்மைக்குச் சான்று பகிர்தல்

(iii) இலங்கையின் ஒழுக்க விழுமியங்களில் இறை அரசின் மதிப்பீடுகள்

(iv) பொது நிலையினர் மறைதூதுப் பணி

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk